எம்.சி.ஓ.பி எண்: **3568**,3569,3886/2023 தேதி: 08.06.2026

நீ.மசா. : 1

பெயர் :பிரபாகரன்

த/பெ. :சின்னதம்பி

வயது :36

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>எதிர்மனுதாரா் தரப்பில் முதல் விசாரணை</u>**

நீதிமன்ற அழைப்பாணையின் போில் நான் இன்று சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் வாழைப்பாடியில் வசிக்கிறேன். நான் லாரி டிரைவராக வேலை செய்கிறேன். நான் என்னுடைய ஓட்டுநா் உாிமம் நகல் தாக்கல் செய்கிறேன். அது X.1. 31.05.2023 அன்று மதியம் 1 மணியளவில் நான் சென்னையை நோக்கி ஈச்சா் லாரி TN52Q1459 லாரியை ஓட்டிக்கொண்டு வந்தேன். அப்போது வாலாஜா டோல் பிளாசாா் தாண்டி வந்தபோது என்னுடைய வண்டியின் டையா் பஞ்சா் ஆனது. அதனால் சாலையில் இடது பக்கத்தில் மண்ரோட்டில் என் வண்டியை நிறுத்தி பாா்த்துக்கொண்டிருந்தேன். அப்போது பாா்க்கிங் விளக்கு போட்டிருந்தேன். முக்கோண வடிவில் உள்ள ாிப்லெக்டா் யை வைத்திருந்தேன். விபத்து மதியம் 1.30 மணிக்கு நடந்தது. அப்போது நல்ல வெளிச்சமாக இருந்தது. அப்போது TN68R5845 என்ற காா் அதிவேகமாக வந்து என்னுடைய லாரியை இடித்தது. இந்த விபத்து குறித்து முதல் தகவல் அறிக்கையை நான் தரவில்லை. இது சம்பந்தமான குற்ற வழக்கு நடந்து வருகிறது. இந்த விபத்துக்கு முழுக்க முழுக்க காா் ஓட்டுநாின் கவனக்குறைவு தான் காரணம்.

**<u>மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் தான் லாரியை ஓட்டிச்சென்றேன். லாரியை இயக்க முறையாக ஓட்டுநா் உாிமம் வைத்துள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் வாகனம் நிறுத்தக்கூடாத இடத்தில் நிறுத்தியதாக குறிப்பிடப்பட்டு்ளளது என்றால் சாிதான். மேலும் முதல் தகவல் அறிக்கையில் இந்த விபத்துக்கு முழுக்காரணம் நான் தான் காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து போலீசாா் என்னை கைது செய்து பின் ஜாமீனில் வெளியே வந்தேன். விபத்து குறித்த மாதிரி வரைபடத்தில் ExP2 இன் படி லாரி தாா் ரோட்டில் நிறுத்தி இருப்பதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்படிதான் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் நான் மண்ரோட்டில் நிறுத்திவைத்திருந்தேன். நான் மண் ரோட்டில் நிறுத்தி வைத்ததற்கு ஆதாராம் போட்டோ உள்ளதா என்றால் இல்லை. மசாஆ 11 குற்ற இறுதி அறிக்கையில் வாகனத்தை நிறுத்தி வைக்ககூடாத இடத்தில் நிறுத்தி வைத்து முன்னெச்சாிக்கை பலகை வைக்காமல் சிக்னல் எதுவும் போடாமல் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் இந்த விபத்துக்கு நான் தான் காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. என்மீது தவறு இல்லை என்று காவல்நிலையத்தில் புகாா் எதுவும் கொடுக்கவில்லை. என் மீது தவறு இல்லை என்று காட்ட நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்துக்கு முழுக்காரணம் நான் தான் என்றாலும் நிறுத்தக்கூடாத இடத்தில் சாலையில் நடுவில் லாரியை நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சாியல்ல. லாரி பஞ்சா் ஆனதால் தான் நான் லாரியை நிறுத்தினேன் என்று போலீஸ் ஆவணத்தில் எந்த குறிப்பு எதுவும் இல்லை என்றால் எனக்கு தொியாது.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.